# திருக்குறள் விருந்து



## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதிய விளக்கவுரையுடன்

திருவள்ளுவர் கல்விக் கழகம்
1008 - 50 Elm Drive East
Mississauga, Ontario
L5A 3X2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் விருந்து

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
எழுதிய விளக்கவுரையுடன்

திருவள்ளுவர் கல்விக் கழகம்
1008 - 50 Elm Drive East
Mississauga, Ontario
L5A 3X2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

திருக்குறள் ஒரு பொது நூல். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை, மாணவர்கள் கற்றுப் பயனடைய வேண்டும்.

இத் திருக்குறள் விருந்தில் அறுபது குறள்களைத் தொகுத்து விளக்கவுரை முதலியன எழுதியவர் கவியோகி சுத்தானந்த பாரதியார். தமிழகம் கண்ட தலை சிறந்த திருக்குறட் புலவர்களில் ஒருவரான சுத்தானந்தர் மாணவருக்கு செய்துள்ள அருந்தொண்டின் பயனை கனடா வாழ் தமிழ் மாணவர்களும் அனுபவிக்க வேண்டும் என்னும் பேரவாவினால் பதிப்பித்துள்ளோம். தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இது ஓர் துணை நூலாக அமையும். மேலும் திருக்குறளை ஆழ்ந்து படிக்க உந்துகோலாகவும் அமையும் எனக் கருதுகிறோம்.

முன்னர் இதனைப் பதிப்பித்த சென்னை ஸ்ரீநிவாச வரதாச்சாரி புத்தக நிலையத்தினருக்கு எம் நன்றி.

மிசிசாக்கா — தி. விசுவலிங்கம்
14–10–95 — திருவள்ளுவர் கல்விக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர்

தமிழ் மணிகாள், திருக்குறள் நமது செல்வம். அது உலகுக்கெல்லாம் பொது நூல். அதில் மனிதன் நன்ருக உலகில் வாழவேண்டிய எல்லா வழிகளும் அடங்கி இருக்கின்றன. திருக்குறள் பொய்யாமொழி. அதன் ஒவ்வொருவரியும் அனுபவ வாக்கு. உலக மொழிகளில் எல்லாம் அது விளங்குகிறது, தமிழுக்கே தனிப்பெருமை தரும் நூல் திருக்குறள்.

இப்படிப் பட்ட திருக்குறளைச் செய்தவர் **திருவள்ளுவர்.** இவர் தாய் ஆதி: தந்தை பகவன்: அக்காள் ஔவை, அண்ணன் அதிகமான் கபிலர் போன்ற அறிவாளர்.

திருவள்ளுவர் பிறவிக்கவி, ஞானி. அவர் மயிலாப்பூரில் ஓர் இலுப்பந் தோப்பில் பிறந்தார். பெற்ருேர் குழந்தையை அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர். ஒரு வேளாளர் குழந்தையை எடுத்துப் பிரியமாக வளர்த்தார். சிறு வயதிலேயே இக்குழந்தை ஞானியாகி, ஒரு மலைக்குத் தவம் புரியச் சென்றது. அங்கே சித்தர் கூட்டத்திற் சேர்ந்து, வள்ளுவர் யோக சித்தி பெற்ருர்.

அந்த மலைக்கருகே காவிரிப்பாக்கம் என்ற ஊர் உண்டு. அதில் மார்க்க சகாயன் என்ற வேளாளச் செல்வனிருந்தான். இவன் ஒருநாள் வள்ளுவரை வணங்கி, ''பெரியீர், எங்கள் ஊரை ஒரு வேதாளம் அழிக்கிறது. அதைத் தங்கள் தவ சக்தியால் விரட்டி அடிக்கவேண்டும்'' என்று முறையிட்டான். வள்ளுவ முனிவர் அவ்வாறே செய்தார். மார்க்க சகாயன் தனது மகள் வாசுகியை வள்ளுவருக்குத் தந்து, தக்க செல்வமும் அளித்தான்.

''வள்ளுவரும் வாசுகியும் மதுரையில் நீண்டகாலம் வசித்து வந்தனர். வள்ளுவர், பாண்டியன் பெரும்பெயர் வழுதியிடம் உள்நாட்டு மந்திரியா யிருந்தார். அந்தக் காலமே திருக்குறளைச் செய்தார்.'' ''பாண்டியன் இறந்த பிறகே வள்ளுவர் மயிலாப்பூருக்கு வந்து, நெசவுத் தொழில் செய்து பிழைத்துக் கொண்டு, மாணவருக்கும் திருக்குறள் பாடம் சொல்லி வைத்தார்'' என்று புதிய ஆராய்ச்சியாளர் சொல்லுகிருர்கள். வள்ளுவர் தமது வாழ்விற் கண்டதையே எழுதி, எழுதியபடியே வாழ்ந்து காட்டினுர். எளிய வாழ்வும் பெருகிய நோக்கமுங் கொண்டார். ஏலேலசிங்கம் போன்ற பெரிய வணிகச் செல்வர் வள்ளுவருக்கு மாணவராஞர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் இல்லறத்திற்கு உயிராயிருந்தவள் வாசுகி. அவள் கற்பிற் சிறந்த உத்தமி. கணவன் மனமறிந்து நடந்தவள். இருவரும் மிகவும் அன்புடன் வாழ்ந்தனர். இவர்கள் இல்லற ஒழுக்கத்தைக் கொங்கணச் சித்தர் போன்ற பெரியாரும் வந்து பார்த்து வியந்தனர். வாசுகி இறந்தபோது, '' என் சொற்படியே நடந்து, என் பணிவிடை செய்தே உறங்கினாய்''. ''நான் எழுந்திருப்பதற்கு முன்பே அதிகாலையில் எழுந்து, எனக்கு வேண்டியதெல்லாம் செய்தாய். உன்னை இழந்த கவலை பெருங்கவலை. அதனால் இரவில் எனக்கு உறக்கமும் வரவில்லையே'' என்று விசனித்தார் கணவர்.

வள்ளுவர் நீண்டகாலமாகத் தமது அனுபவங்களைக் குறளடிகளாக எழுதிச் சேர்த்தார். அதுவே திருக்குறளானது. திருக்குறள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறியது. பாண்டிய மன்னன் முதல், சங்கப் பெரும்புலவர் அனைவரும் குறளை மெச்சிப் பாமாலை சூட்டி வணங்கினார்கள்.

திருக்குறள் பாடம் சொல்வதிலேயே இறுதிநாட்களைக் கழித்து, வள்ளுவர் உடலை உதறினார். தம் உடலை அப்படியே காக்கை கழுகுகள் உண்ணும்படி போட்டுவிட வேண்டுமென்றார். அதன்படியே நடந்தது.

வள்ளுவர் வரலாறு அதிகம் தெரியவில்லை. ஆனால் திருக்குறளே அவரது வரலாறு; அதுவே வள்ளுவர் என்று நாம் கருதுவோம். ஏனெனில் வள்ளுவரை நாம் இன்று நேசிப்பதும் வணங்குவதும் எதனால்? அமரத்தன்மை பெற்ற திருக்குறளால். திருக்குறளைப் படிக்கும்போது, மகாத்மா காந்தி, திலகர், ராஜாஜீ, புத்தர், கண்ணன், இராமன், ஏசுநாதர், முகம்மது ரசூல், இராமனுஜர் முதலிய பெரியார் வரலாறுகளை நினைக்கவும். தமிழராய்ப் பிறந்த எல்லாரும் திருக்குறளைப் படித்து நடக்கவேண்டும். மாணவமணிகாள், வாருங்கள். திருக்குறள் படிப்போம். திருக்குறளை இந்தக்காலம் வாழ்ந்துகாட்டியவர் மகாத்மா காந்தி. தியாகச் சுடரான அவருக்கே இத் திருக்குறள் விருந்தை அர்ப்பணிக்கிறேன்.

புதுயுக நிலையம் — சுத்தானந்த பாரதி
புதுச்சேரி.
21–2–1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்
## கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

2. கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்து கின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினையும் (நல்வினை, தீவினை) சேர்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறி (மெய், வாய், கண், மூக்கு, செவி) வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

8. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

கேட்காத செவி பார்க்காத கண் முதலியனபோல், எண்குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.
எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயஉடம்பினனாதல், இயற்கைஉணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை.

10. பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் விருந்து

## 1. தலை வணங்குக !

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. - குறள் 9

எண் குணத்தான் - எட்டுக்குணங்களையுடைய இறைவன், தாளை வணங்காத் தலை - திருவடிகளைப் பணியாத தலை, கோள் இல் பொறியில் - உணர்ச்சி கொள்ளாத ஐம்பொறிகள் போல், குணம் இலவே - பயனில்லையாம்.

ஐம்பொறிகள் எவை? மெய், வாய், கண், மூக்கு, செவி. இவற்றின் தன்மைகள் என்ன? கேளாத காதும், பாராத கண்ணும், முகராத மூக்கும், சுவையாத வாயும், உணராத உடலும் இருந்தும் பயனென்ன? தலையின் பயனென்ன? நாம் தலை வணங்கும் இறைவனின் எண் குணங்கள் யாவை?-சுயேச்சை, கட்டின்மை, இயலுணர்வு, தூய அருளுடம்பு, முற்றறிவு, பேராற்றல், நிறையின்பம், எல்லாம் உடைமை- இக் குணங்கள் கடவுளுக்கே உண்டு. அவரே வணங்கத் தக்கவர்.

## 2. அந்தணர்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். - குறள் 30

மற்றெவ்வுயிர்க்கும் - பிறவுயிர்களுக்கெல்லாம், செந்தண்மை பூண்டு - செவ்விய இனிய தன்மையே விரதமாகக் கொண்டு, ஒழுகலால் - எவருக்கும் தீமையில்லாது நடப்பதால், அந்தணர் என்போர் - அந்தணர் என்னும் அருளாளர், அறவோர் - அறநெறிச் செல்வராவர்.

அந்தணர் யார்? அறவோர் தன்மை யென்ன? உயிர்க்கருணை எதைக் காட்டுகிறது? செந்தண்மைக்கு உதாரணம் சொல்லுக.

## 3. பொறுமை

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. - குறள் 165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் - பொறுமை கொண்டவர்கள் கெட அதுவே போதும், ஒன்னார் - பகைவர், வழுக்கியும் - தவறினலும், கேடு ஈன்பது - தீமை தருவதாகும். (பொறுமை)

பொறுமைக்காரரைக் கெடுக்க வேறு பகைவர் வேண்டுமா? பொறுமை என்ன செய்யும்?

## 4. தெய்வ மனிதர்

வையத்துள் வாழ்வாங்கு வழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். - குறள் 50

வையத்துள் - உலகிலேயே, வாழ்வாங்கு வாழ்பவன் - வாழும் முறைப்படி இல்லறத்தில் வாழ்பவன், வான் உறையும் - வானகத்தில் வசிக்கும், தெய்வத்துள் வைக்கப்படும் - தெய்வத்திற்கு இணையாக வைத்து மதிக்கப் பெறுவான்.

இந்த உலகிலேயே வாழ்வாங்கு வாழ்வது எப்படி? இயல்பான இல்லறத்தில்,அன்பும் அறமும், வாய்மையும் தூய்மையும், அறிவும் ஆற்றலும், சீரும் செல்வமும் கொண்டு வாழ்பவன் பெருமை என்ன? வானத் தேவர் பெருமை என்ன? வையத் தேவர் யார்?

வகை யறிந்து வாழ்பவன் வையகத் தேவன்.

## 5. அன்பே உயிர்நிலை

அன்பின் வழிய துயிர்நிலை: அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த வுடம்பு. - குறள் 80

உயிர் நிலை - உயிரின் நிலைக்களன், அன்பின் வழியது - அன்பு நெறியே, அஃதிலார்க்கு - அன்பில்லாதவர்களுக்கு, என்பு தோல் போர்த்த உடம்பு - வெறும் எலும்பும் தோலும் போர்த்த(உணர்வற்ற,) உடலே யுண்டு.

உடலுக்கு உயிர் எது? அன்பில்லாத உடல் எப்படிப் பட்டது? எலும்புந் தோலும் போர்த்தால் உடம்பாய் விடுமா? உயிரில்லாத உடம்பு வாழுமா? அன்பில்லாத வாழ்வு மகிழுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரும் உயிரே உடலில் அன்பாம்.

## 6. விருந்தும் அனிச்சமும்

மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. – குறள் 90

அனிச்சம் – அனிச்சம்பூ, மோப்பக் குழையும் – முகந்தால் வாடும், விருந்து – விருந்தாளி, முகம் திரிந்து நோக்க – முகம் வேறுபட்டுப் பார்த்ததும், குழையும் – மனம் வருந்துவான்.

அனிச்சம்பூவின் தன்மை என்ன? விருந்தாளி குழைவதேன்? விருந்தை எப்படி உபசரிக்கவேண்டும்?

## 7. பணிவு

பணி வுடையன் இன்சொல்லன் ஆதல், ஒருவற்கு
அணியல்ல மற்றும் பிற. – குறள் 95

ஒருவற்கு அணி–ஒரு மனிதனுக்கு அணிகலன், அழகு, அலங்காரம், பணிவுடையன் இன்சொல்லன் ஆதல்– பணிந்து நடந்து இனிய சொல்லாடலேயாம், அல்ல பிற– மற்ற ஆடை ஆபரணங்கள் அணிகலன் ஆகா.

மனிதனுக்கு நல்லணிகள் எவை? எவை இல்லை? ஆடம்பரமினுக்குடன் அகம்பாவமாக நடத்தல் மனிதனுக்கு அழகா? ஏன் அழகாகாது? கடுகடுப்பவனுக்குக் கடுக்கன் அழகு தருமா? ஏன் தராது?

## 8. காலத்தில் உதவி

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. – குறள் 102

காலத்தினால் – சரியான காலத்தில், தேவையான சமயத்தில், செய்த நன்றி – ஒருவன் செய்த நல்லுதவி, சிறிது எனினும் – சிறிதே என்றாலும், ஞாலத்தின் – உலகைவிட, மாணப் பெரிது – மிகவும் பெரிதாகும்.

உலகம் என்ன நன்மை செய்கிறது? பருவ காலத்தில் பயிர் விளைப்பதால் என்ன பயன்?
எந்த நன்மை மிகப் பெரிது? ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. அடக்கம்

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். – குறள் 121

அடக்கம் – அடங்கி நடத்தல், மனதை அடக்குதல், அமரருள் உய்க்கும் – ஒருவனை அமரத் தன்மை பெற்ற சித்தருள் சேர்க்கும், அடங்காமை – மனம் அடங்காது நடத்தல், ஆர் இருள் உய்த்து விடும் – கொடிய மடமையிருளில் ஆழ்த்தி விடும்.

அமரர் யார்? மனதை அடக்கியவர் பெறும் நன்மை என்ன? அடங்காமல் கண்டபடி நடப்பதன் தீமையென்ன? மடமையில் ஆழ்த்துவது எது? அமரத் தன்மை தருவது எது?

## 10. ஒழுக்கமே உயர்வு

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. – குறள் 137

ஒழுக்கத்தின் – சன்மார்க்க ஒழுக்கத்தால், நன்னடையால், மேன்மை எய்துவர் – மனிதர் சிறப்படைவர், இழுக்கத்தின் – இழி நடையால், குற்றமுள்ள நடையால், எய்தாப் பழி – அதற்கு முன் அடையாத பழி பாவத்தை, எய்துவர் – அடைவார்.

யார் மேன்மை அடைவார்? ஒழுக்கத்தால் என்ன பயன்? யார் பழிகாரர்? இழுக்கத்தால் என்ன கெடுதல்? ஒழுக்கம் எது? இழுக்கம் எது?

## 11. பொறுமையா யிரு

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை. – குறள் 151

அகழ்வாரை – தன்னைத் தோண்டுகிறவர்களை, தாங்கு நிலம் போல – பொறுக்கும், ஏந்தி நிற்கும் தரையைப்போல, தம்மை இகழ்வாரை – தம்மை இழிவாகப் பேசுகிறவர்களை, தூஷிக்கிறவர்களை, பொறுத்தல் தலை – கோபமில்லாது தாங்குதல் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை எப்படி யிருக்க வேண்டும்? நிலத்தின் தன்மை என்ன?

## 12. பொறுமைப் படாதே

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு. – குறள் 161

ஒருவன் தன் நெஞ்சத்து – ஒரு மனிதன் தனது நெஞ்சில், அழுக்காறு இலாத – பொறுமை இல்லாத, இயல்பு – தன்மை, குணம், சுபாவம், ஒழுக்கு ஆறுக் கொள்க – நல்லொழுக்க வழியாகக் கைக்கொள்க.

நல்லொழுக்க வழி எது? அழுக்காறு என்றால் என்ன? அழுக்காறு எங்கே உண்டாகிறது? நெஞ்சம் எப்படி இருக்க வேண்டும்?

## 13. தன் குற்றம் திருந்துக

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? – குறள் 190

ஏதிலார் குற்றம் போல் – பிறர் செய்த குற்றத்தைப் போல, தம் குற்றம் – தாமே செய்யுங் குற்றத்தை, காண்கிற் பின் – எண்ணிப் பார்த்தால், மன்னும் உயிர்க்கு – உடலில் நிலைபெற்ற உயிருக்கு, தீது உண்டோ – தீங்கு உண்டோ? (இல்லை).

மன் உயிர் என்றால் என்ன? அது தீங்கில்லாது வாழ்வது எப்படி? ஏதிலார் யார்? பிறர் குற்றங் காணுமுன் என்ன செய்ய வேண்டும்? உன் குற்றத்தை அறிந்தாயா?

## 14. அறிவாளன் செல்வம்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேர் அறி வாளன் திரு. – குறள் 215

உலகு அவாம் – உலகிற்கு நன்மையை விரும்புகிற, பேர் அறிவாளன் – பெரிய அறிவாளியின், திரு – செல்வம் அல்லது பொருள், அறிவுச் செல்வம், ஊருணி நீர் நிறைந்து அற்றே – ஊரார் உண்ணும் குளம் நீரால் நிரம்பியது போலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் அறிவாளன் திரு எது? அறிவாளன் திரு எதை போன்றது? நிறைந்த ஊருணி எதைப் போன்றது?

## 15. பசி தீர்ப்பது

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். – குறள் 225

ஆற்றுவார் – தவம் ஆற்றுவார், தவஞ் செய்பவர், ஆற்றல் – சக்தி, வல்லமை, பசி ஆற்றல் – பசியைப் பொறுத்தல், பசி தாங்கல், (ஆனால் அது) அப்பசியை – அந்தப் பசியை, மாற்றுவார் ஆற்றலின் – பசி தீர்க்கும் ஈகையாளன் ஆற்றலுக்கு, சக்திக்கு, பின் – பிறகே, அடுத்த படியே ஆகும்.

ஆற்றுவார் – எதை ஆற்றுவார்? தவத்தினரின் ஆற்றல் என்ன? பசியைப் பொறுப்பதை விட எது சிறந்தது? பசி தீர்ப்பவன் யார்? அவன் ஆற்றல் எப்படிச் சிறந்தது?

## 16. வாழ்வார் யார்?

வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய
வாழ்வாரே வாழாதவர் – குறள் 240

வசை ஒழிய –பழியில்லாமல், அபவாத மில்லாமல், வாழ்வாரே வாழ்வார் – அறவழியில் வாழ்பவரே உயிர் வாழ்பவர், இசை ஒழிய – புகழ் நீங்கும்படி, வாழ்வாரே, வாழாதவர் – பழி சுமந்து வாழ்பவரே வாழாத மனிதர், செத்தார் போல்வர், நடைப்பிணமாவார்.

வழ்வார் யார்? இசையுடன் வாழ்வது எப்படி? வாழாத நடைப்பிணம் யார்? வசை யாருக்கு? எதனால் இசை ஒழியும்? எதனால் வசை வரும்? இசை எதனால் வரும்?

## 17. அருட் செல்வம்

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. – குறள் 241

அருட்செல்வம் – திருவருட் செல்வமே, செல்வத்துள் செல்வம் – எல்லாச் செல்வங்களையும் விடப் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம், சீரியற் செல்வம், பொருள் செல்வம் – உலகப் பொருளான செல்வம், பொன் மண் செல்வங்கள். பூரியார் கண்ணும் உள – இழிநடைப் புல்லரிடமும் உண்டு.

சீரியற் செல்வம் எது? திருவருட் செல்வம் எது? அன்பு, கருணை, வாய்மை, தூய்மை, தெய்வபக்தி முதலியவற்ருல் என்ன பயன்? பொருட் செல்வம் எவை? பூரியர் யார்?

## 18. திருட்டுச் சொத்து நிலைக்காது

களவினல் ஆகிய ஆக்கம், அளவிறந்து
ஆவது போலக் கெடும். – குறள் 283

களவினல் – திருட்டினல் சேர்ந்த, ஆக்கம் – செலவு, சொத்து, அளவிறந்து ஆவது போல – அளவுக்கு மிஞ்சிக் குவிவது போலத் தோன்றி, கெடும் – முடிவில் எல்லாம் கெட்டொழியும்.

(அளவிறந்து கெடும் – அளவுக்கு மிஞ்சிப் பெரு நஷ்டமாக முடியும்)

திருட்டுச் சொத்து நிலைக்குமா? ஏன்? திருட்டிலே வந்தது பிரட்டிலே போகும் என்பதன் பொருளென்ன?

## 19. மனச்சாட்சி

தன்நெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். –குறள் 293

தன்நெஞ்சு அறிவது – தனது நெஞ்சறிந்த உண்மையை, மனச்சாட்சி யறியும் ஒன்றை, பொய்யற்க – பொய்யாக்காதே திரித்துக் கூருதே, பொய்த்தபின் – பொய் சொன்னபிறகு, பொய்யாக்கிய பிறகு, தன் நெஞ்சே – தனது நெஞ்சமே, மனச்சாட்சியே, தன்னைச் சுடும் – தன்னை வருத்தும்; 'ஏன் பொய் சொன்னய்' என்று சூடு கொடுக்கும்.

'' நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்'' என்பதன் பொருள் என்ன? ''வாய்ப்புளுகு மனக் குடைச்சல்'' என்பதன் பொருளென்ன? நெஞ்சைத் தொட்டுப் பேசுவதன் நன்மை என்ன? மனச்சாட்சி எங்கே உள்ளது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. வாய்மை, தூய்மை

புறம்தூய்மை நீரால் அமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும். –குறள் 298

புறம் தூய்மை – வெளிச் சுத்தம், உடல் தூய்மை, நீரால் அமையும் – தண்ணீரால் உண்டாகும், அகம் தூய்மை – உள்சுத்தம், மனத்தூய்மை, வாய்மையால் – உண்மை சொல்லுவதால், காணப்படும் – அறியப்படும்.

ஒருவன் உள்ளம் சுத்தமானது அழுக்கற்றது என்பதற்கு அறிகுறி என்ன? வாய்மை என்றால் என்ன? வாயின் தன்மை என்ன? உடல் அழுக்கை எப்படி நீக்குவது? மனத்தழுக்கை.......? ''உள்ளம் உள்ளத்தைச் சொல்லும்'' – பொருளென்ன?

## 21. சினத்தை மற

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும். –குறள் 303

யார் மாட்டும் – எவரிடமும், வெகுளியை – கோபத்தை, சினத்தை, மறத்தல் – மறப்பாயாக, அதனால் – அந்தச் சினத்தால், தீய பிறத்தல் வரும் – தீமை உண்டாக நேரிடும்.

தீமை எதனால் வரும்? சினத்தை மறத்தல் எப்படி? சினத்தால் வரும் தீமை என்ன?

## 22. துன்புறுத்தாதே

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும். – குறள் 319

முற்பகல் – முந்தின நாள், பிறர்க்கு இன்னா செய்யின் – பிறர்க்குத் தீமை செய்தால், பிற்பகல் – மறுநாளே, தமக்கு இன்னா – தீமை செய்தவருக்கே தீமைகள், தாமே வரும் – தம்மால் வந்து சேரும்.

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' – இதற்குப் பொருள் என்ன? ஒருவனுக்குத் தீமை வருவது ஏன்? தீமைக்குத் தண்டனை என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. நிலையாச் செல்வம்

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்து அற்று. – குறள் 332

பெருஞ் செல்வம் – பெருகிய செல்வ வாழ்க்கை, கூத்தாட்டு அவைக்குழாத்து அற்றே – நாடக மன்றின் கூட்டத்தைப் போன்றதே, போக்கும் – அந்தச் செல்வம் போதலும், அது விளிந்து அற்று – (நாடகம் முடிந்ததும் கூட்டம்) குறைதல் போலாகும்.

கூத்தாட்டவைக் குழாம் என்றால் என்ன? நாடகக் கூட்டம் எப்போது கலையும்? பெருஞ் செல்வ வாழ்க்கை எதைப் போலும்? விளிதல் என்றால் என்ன? (குறைதல் – ஓய்வு.)

## 24. கல்வியே பெருஞ் செல்வம்

கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. – குறள் 400

ஒருவற்கு கல்வி – ஒரு மனிதனுக்குக் கல்வியறிவே, கேடு இல் விழு, செல்வம் – கெடாத, அழியாத, பெருமையுள்ள செல்வமாகும். மற்ற அவை – மற்ற உலகச் செல்வங்கள், மாடு அல்ல – (கல்வியைப்போல) உயர்ந்த செல்வமன்று.

உலகத்தில் அழியாச் செல்வம் எது? கல்வி எப்படி விழுச் செல்வமாகும்? மற்றச் செல்வங்கள் மட்டமானவையா ஏன்? கல்வியின்றிச் செல்வம் பயனாகுமா?

## 25. அடங்கியிரு

கல்லா தவரும் நனிநல்லர், கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். – குறள் 845

கற்றார் முன் – கற்றறிந்த புலவர் முன், சொல்லாது இருக்கல் பெறின் – கண்டபடி பேசாது, அடங்கியிருந்தால், கல்லதவரும் – படிக்காதவர்கள் கூட, நனி நல்லர் – மிகவும் நல்லவர்கள் ஆவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ருர் முன் எப்படி நடக்கவேண்டும்? அதிகப் பிரசங்கித் தனமாக உளறிஞல் என்ன நினைப்பார்கள்? நனி நல்லர் யார்?

## 26. நல்லுரை கேள்

எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். – குறள் 416

எனைத்தானும் – எந்த அளவிலாயினும், நல்லவை கேட்க – நல்லுரைகளைக் கேட்பாயாக. அனைத்தானும் – அவ்வளவில், ஆன்ற பெருமை தரும் – சிறந்த மாண்பை அளிக்கும்.

எனைத்தானும் என்ருல் என்ன? அனைத்தானும் என்ருல் என்ன? நல்ல விஷயங்களைக் கேட்பதால் என்ன பயன்? பெருமை தருவது எது?

## 27. நல்லறிவு

சென்ற இடத்தால் செலவிடா(து) தீதொரீ இ
நன்றின்பால் உய்ப்ப(து) அறிவு. – குறள் 422

சென்ற இடத்தால் செலவிடாது – மனம் சென்ற இடத்தில் அதைப் போக விடாது, மனம் கண்ட இடத்தில் செல்லவிடாது அடக்கி, தீது ஒரீ இ – தீமையை விலக்கி, நன்றின்பால் – மனதை நன்மையினிடத்தில், உய்ப்பது அறிவு – செலுத்துவதே நல்லறிவாகும்.

மனதை எதில் செலுத்த வேண்டும்? எதில் செலுத்தக் கூடாது? கண்ட இடத்தில் மனம் அலைந்தால், என்ன ஆகும்? தீதொரீ இ என்ருல் என்ன?

## 28. தற்புகழாதே

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. – குறள் 436

எஞ்ஞான்றும் – எந்நாளும், தன்னை வியவற்க – தன்னையே பெருமைப் படுத்திப் பேசாதே; தற்புகழாதே. நன்றி பயவா வினை – நன்மை இல்லாயத வீண் செயலை, நயவற்க – விரும்பாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வியப்பவனை என்னென்பது? ஐம்ப மடிப்பதால் என்ன தீமை? நன்றி பயவா வினை எது?

## 29. இனப்படி அறிவு

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தற்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. – குறள் 452

நிலத்தியல்பால் – மண்ணின் தன்மையினால், நீர் திரிந்து – தண்ணீரின் தன்மை திரிந்து, அற்று ஆகும் – அந்த நிலத்தின் இயல்பே ஆகும். (அதுபோல), மாந்தர்க்கு – மனிதருக்கு, அறிவு – கல்வி, கேள்வி, அறிவு; இனத்து இயல்பது ஆகும் – அவர்கள் சேரும் இனத்தின் தன்மைப்படி ஆகும்.

செயற்கை வாசனை இயற்கை வாசனை என்றால் என்ன? இனத்தியல்பிற்கு உதாரணம் எது? நீரியல்பு எதனால் மாறும்? அறிவு எதனால் வளரும்?

## 30. குணமே நாடுக

குணம்நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். – குறள் 504

குணம் நாடி – ஒருவருடைய நற்குணத்தை ஆராய்ந்து, குற்றமும் நாடி – குற்றத்தையும் ஆராய்ந்து, அவற்றுள் – குணம் அல்லது குற்றம் இரண்டிற்குள், மிகை நாடி – அதிகமான குணம் உடையோர்களையே நாடி, மிக்க கொளல் – மிகவும் நட்புரிமை கொள்க.

நல்லவர்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி? மிகை நாடுதலாவது என்ன? மிக்கக் கொளல் – எதை?

## 31. கூடி வாழுதல்

காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. – குறள் 527

காக்கை – காக்காய், கரவா – எதையும் ஒளிக்காது, கரைந்து உண்ணும் – தன் இனத்தைக் கூப்பிட்டு அழைத்து, உடனுண்ணும்; அன்ன நீரார்க்கே – அப்படிப்பட்ட தன்மை உடையவர்களுக்கே, ஆக்கமும் உள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– செல்வமும் பயனுடையதா யிருக்கும்.

நாம் சோறு போட்டு 'கா, கா' என்ருல் என்ன காண்கிறேம்? காக்கை எப்படி உண்ணும்? செல்வம் உள்ளவர்கள் எப்படி உண்ண வேண்டும்?

## 32. மறவாமை

அரியவென்று ஆகாத இல்லை; பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். – குறள் 537

பொச்சாவா – மறவாத, சோராத; கருவியால் போற்றிச் செயின் – மனமாகிய கருவியை ஊன்றிக் கருத்துடன் செய்தால், அரிய என்று – செய்வதற்கு அரியது என்று, ஆகாத இல்லை – முடியாத காரியங்கள் உலகில் இல்லை. (முழுமனதையும் ஊன்றிச் செய்தால், உலகில் செய்யக் கூடாத காரியமில்லை.)

பொச்சாவாக் கருவி என்ருல் என்ன? அரிய காரியங்களை எப்படிச் செய்வது?

## 33. உடைமை

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். – குறள் 592

உள்ளம் உடைமை – உள்ளுறுதி உடைமையே, ஊக்கம் உடைமையே, உடைமை – ஒருவனுக்கு நல்ல செல்வமாகும். பொருள் உடைமை – பண உடைமை, நில்லாது நீங்கிவிடும் – நிலையில்லாமல் நீங்கிச் செல்லும்.

எது உண்மையான உடைமை? எது நிலையில்லாது நீங்கும்? உள்ளம் உடைமை என்ருல் என்ன?

## 34. கெடுவது ஏன்

நெடுநீர், மறவி, மடி, துயில், நான்கும்
கெடுநீரார் காமக் கலன். – குறள் 605

நெடுநீர் – தாமதமாகச் செய்தல், மறவி – மறதி, மடி – சோம்பல், துயில் – தூங்கி விழுதல், நான்கும் – இந்த நான்கும், கெடுநீரார் – கெடுந்தன்மை உள்ளவர்களின், காமக்கலன் – விருப்பமான மரக்கலம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் ஒரு கடல், அதில் மறவாத ஊக்கமுள்ள சுறுசுறுப்பு என்னும் படகில் ஏறிச்சென்றால், வெற்றித்துறை சேரலாம். ஆனால் காரியக்கேடர் தாமதம், மறதி, சோம்பல், தூக்கம் ஆகிய நான்கும் சேர்ந்த ஆசைப் படகில் ஏறிச் செல்வர். அந்தப் படகு கவிழ்வது உறுதி.

காமக்கலன் என்றால் என்ன? காரியத்தைக் கெடுப்பவை எவை?

## 35. தாளாண்மை

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். – குறள் 614

தாளாண்மை இல்லாதான் – உழைத்துப் பாடுபடாதவன், வேளாண்மை – பிறருக்கு உதவி செய்கை, பேடிகை – செயலில்லாத பேடியின் கையில், வாளாண்மை போல – வாள்வீச்சுப் போல, கெடும் – பயனில்லாது போகும்.

தாளாண்மை என்றால் என்ன? வேளாண்மை என்றால் என்ன? வாளாண்மை என்றால் என்ன? வாள் யார் கையில் இருந்தால் பயன் படும்? பேடி கையில் ஏன் கெடும்?

## 36. துன்புறாதவன்

இன்பம் விழையான், இடும்பை இயல்பென்பான்,
துன்பம் உறுதல் இலன். – குறள் 628

இன்பம் விழையான் – உலகின்பத்திற்கு ஆசைப்படாதவன், இடும்பை இயல்பு என்பான் – உடல் வாழ்விற்குத் துயரம் இயல்பு என்று நினைந்து, அமைதியுடன் நடப்பவன், துன்பம் உறுதல் இலன் – துன்பம் அடைய மாட்டான்.

எவன் துன்புற மாட்டான்? இடும்பை எதற்கு இயல்பு? இன்பம் விழைவான் யார்?

## 37. மதிநுட்பமும் நூலறிவும்

மதிநுட்பம் நூலோ டுடையார்க்(கு) அதிநுட்பம்
யாவுள முன்நிற்பவை? – குறள் 636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலோடு - நூலறிவுடன், மதிநுட்பம் உடையார்க்கு - இயற்கையான நுண்ணறிவும் உடையவர்களுக்கு, முன் நிற்பவை - எதிர் நிற்பவையான, அதிநுட்பம் - பகைவரின் மிகநுட்பமான சூழ்ச்சிகள், யாவுள - எவை உண்டு?

இயற்கை அறிவுடன் நூலறிவும் சேர்ந்தவர்களை பகைவரின் தந்திரச் சூழ்ச்சி எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாது.

யார் முன் பகைவர் சூழ்ச்சி செல்லாது? மதி நுட்பம் என்றால் என்ன? நூலறிவுடன் எதுவும் சேரவேண்டும்?

## 38. நா நலம்

நாநலம் என்னும் நலனுடைமை, அந்நலம்
யாநலத் துள்ளதூ உம் அன்று. - குறள் 641

நாநலம் - (ஒரு மந்திரிக்கு) சொல் திறமை, பேச்சினிமை, என்னும் நலன் உடைமை - என்ற நலமே உடைமையாகும், அந்நலம் - அந்த நல்ல சொல்லுடைமை, யாநலத்து உள்ளதூவும் அன்று - வேறு எந்த நன்மையிலும் அடங்கி நிற்பதில்லை. (எல்லா நலங்களையும் மிஞ்சியது நாநலமே).

நாநலம் என்றால் என்ன? அதற்கு இணை யாநலம்? ஏன் அது மற்ற நலங்களை மிஞ்சியது.

## 39. சொற்சோர்வு

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. - குறள் 642

ஆக்கமுங் கேடும் - வாழ்வும் தாழ்வும், நல்லதும் கெட்டதும், அதனால் வருதலால் - அதனால் உண்டாவதால்; சொல்லின்கண் சோர்வு - பேச்சில் சோர்வை, காத்து ஓம்பல் - வராது தடுத்துக் கருத்துடன் பேசுக.

காத்தோம்பல் என்றால் என்ன? எதைத் தடுக்க வேண்டும்? சொற்சோர்வினால் என்ன தீமை? ஆக்கம் எதனால் வரும்? கேடு எதனால் வரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. சொன்னபடி செய்தல்

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். – குறள் 664

சொல்லுதல் யார்க்கும் எளிய – இன்னது செய்ய வேண்டும் என்று சொல்லுவது எவருக்கும் எளிது, சொல்லிய வண்ணம் செயல் – சொல்லியபடி செய்வது, அரியவாம் – அரிதாகும்.

எளிது எது? அரிது எது? ''பேச்சுக்கு வீரன்; பின்னே கும்ப கருணன்'' என்பதன் பொருளென்ன?

## 41. இனியதைச் செய்க

துன்பம் உறவரினுஞ் செய்க; துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. – குறள் 669

இன்பம் பயக்கும் வினை – பலருக்கு இன்பத்தைத் தரும் செயலை, துன்பம் உறவரினும் – இடர் மிகுதியாக வந்தாலும், துணிவு ஆற்றி – தளராத துணிவு கொண்டு, தைரியமாக, செய்க – செய்து முடிப்பாயாக.

இன்பம் பயக்கும் வினை ஒன்று சொல்லுக. அதை எப்படிச் செய்ய வேண்டும்? மகாத்மா காந்தி எப்படி இந்தியாவை விடுதலை செய்தார்?

## 42. குறிப்பறிந்து நட

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்(கு) அணி. – குறள் 701

கூறாமை நோக்கி – பேச்சில்லாமலே பார்த்து, குறிப்பறிவான் – முகக் குறிப்பால் ஆளின் மனதை அறிபவன், எஞ்ஞான்றும் – எக்காலமும், மாறாநீர் வையக்கு – கடல் சூழ்ந்த உலகிற்கு, அணி – அணிகலனாவான்.

உலகிற்கு அணி யார்? '' முகத்திலே மனத்தைப் பார்'' என்பதன் பொருள் என்ன? குறிப்பறிந்து பேசுவதன் பயன் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. சிறந்த புலவர்

கற்றாருள் கற்றார் எனப்படுவர், கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். – குறள் 722

கற்றார் முன் – கற்றறிந்த புலவர் முன், கற்ற – தான் கற்றதை, செலச் சொல்லுவார் – மனங் கொள்ளும்படி உரைப்பவர், கற்றாருள் கற்றார் எனப்படுவர் – கற்றவருள் சிறந்த அறிஞர் எனப்படுவார்கள்.

கல்வித் திறமையைப் பதம் பார்ப்பது எப்படி? யார் முன் தான் கற்றது சொல்ல வேண்டும்? கற்றாருள் கற்றார் யார்?

## 44. செல்வர் பெருமை

இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. – குறள் 752

இல்லாரை – முயன்று பொருள் தேடாதவரை, ஆக்கமில்லாதவரை, எல்லாரும் எள்ளுவர் – ஊரில் உள்ளார் அனைவரும் இகழுவர். செல்வரை – முயன்று செழித்த செல்வரை, எல்லாரும் சிறப்பு செய்வர் – ஊரில் எல்லாரும் மரியாதைப் படுத்துவார்கள்.

இல்லார் யார்? ஊரார் யாரை எள்ளுவர்? யாரை மதித்துப் போற்றுவர்?

## 45. பெருமுயற்சி செய்க

கான முயலெய்த அம்பினில், யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. – குறள் 772

கான முயல் எய்த அம்பினில் – காட்டு முயலைக் குறிபார்த்து எய்த அம்பை விட, யானை பிழைத்த வேல் – யானைமேல் எறிந்து தவறிய வேலை, ஏந்தல் இனிது – கையில் பிடிப்பது ஆண்மைக்கினிது.

முயல் மேல் அம்பெய்வதைவிட, யானை மேல் எறிந்து தவறுவதே வீரத்தனம் – ஏன்? எலியை அடித்தவன் – புலியைப் பிடித்தவன் – யார் வீரன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. இடித்துத் திருத்து

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக் கண்
மேற்சென்(று) இடித்தற் பொருட்டு. – குறள் 784

நட்டல் – நட்பாடுதல், நகுதற் பொருட்டு அன்று – சும்மா சிரித்து விளையாட அன்று, மிகுதிக் கண் – மிகை செய்தால், மேற் சென்று – அந்தக் குற்றத்தைத் தாக்கி, இடித்தற் பொருட்டு – இடித்துக் காட்டி குற்றங்கடியவே?

நட்பு எதற்காக? கேலியும் சிரிப்புமாகப் பொழுது போக்கவா? ஒரு நண்பன் குற்றம் செய்தால், என்ன செய்யவேண்டும்.

## 47. பேதை தொழில்

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில். – குறள் 833

நாணுமை – வெட்கமின்மை, நாடாமை – நலத்தை நாடாமை, கருதாமை, நார் இன்மை – அன்பின்மை, யாதொன்றும் – எதையும், பேணுமை – பாதுகாக்காமல் கண்டபடி போடுதல், பேதை தொழில் – அறிவிலியின் வேலையாகும்.

பேதை யார்?அவர் தொழில் என்ன? நாணுமை – எதற்கு? ஏன்? நாரின்மை என்ருல் என்ன? பேணுமை – எதை?

## 48. தற்செருக்கு

வெண்மை எனப்படுவ(து) யாதெனின், ஒண்மை
உடையம் யாம் என்னும் செருக்கு. – குறள் 844

வெண்மை – அறியாமை, ஒன்றுந் தெரியாமை, யாது எனின் – எது என்ருல், யாம் ஒண்மை உடையம் – நாம் அறிவுடையோம், எல்லாம் தெரிந்தோம், என்னும் செருக்கு – என்கிற இறுமாப்பேயாம்.

வெண்மை, ஒண்மை – பொருள் என்ன? எது வெள்ளைத்தனம்? செருக்குசருக்கும் – என்பதன் பொருள் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. பகையை முற்றவிடாதே

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. – குறள் 879

முள் மரம் – முள் குத்தும் செடியை, இளைதாக – இளையதா யிருக்கும்போதே, கொல்க – கெல்லி யெறிக, அழிக்க, காழ்த்த இடத்து – முற்றிப்போனால், கைகொல்லும் – தொட்டவர் கையைப் புண்ணாக்கும், வருத்தும்.

முள்ளை முளையிலே கிள்ளு – பொருளென்ன? முற்றவிட்ட கற்றுழை முதிரவிட்ட பகைபோலாகும் – பொருள் என்ன? இக்குறளின் கருத்தென்ன? முள் மரம் எதைப்போல? பகையை எப்போது ஒழிக்க வேண்டும்? பகை முற்றினால் என்னவாகும்?

## 50. சூதிற் சிக்காதே

வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்,
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. – குறள் 931

வென்றிடினும் – வென்றாலும், செயித்தாலும், சூதினை வேண்டற்க – சூதாட்டத்தை விரும்பாதே, வென்றதூவும் – ஆட்டம் கெலித்ததும், தூண்டில் பொன் – தூண்டிலின் இரும்புக் கொக்கியை (அதிலுள்ள இரையை), மீன் விழுங்கி அற்று – மீன் விழுங்கியது போலாகும்.

தூண்டில் பொன் என்றால் என்ன? அதில் என்ன இருக்கும்? அதை மீன் விழுங்கினால் என்னவாகும்? இது எதற்கு உதாரணம்? நளன் சூதாடியதால் வந்த கேடென்ன?

## 51. மானமிழந்து வாழார்

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின். – குறள் 969

மயிர் நீப்பின் – ஒரு மயிர் நீங்க நேர்ந்தால், வாழாத – உயிர் வாழாதா, பிழைக்காத, கவரிமா, அன்னார் – கவரி மானைப் போன்றவர்; மானம் வரின் – மானம் கெட நேர்ந்தால், உயிர் நீப்பர் – உயிரை விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரிமான் ஒரு மயிர் நீத்தால் என்னவாகும்? கவரிமான் அன்னார் யார்? மானம் பெரிதோ; உயிர் பெரிதோ?

## 52. மேலோர், கீழோர்

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர். - குறள் 973

மேலல்லார் - மேலான குணமில்லாதவர், அற்பர், மேலிருந்தும் - மேல் இடத்தில் அமர்ந்தும், மேலல்லார் - மேன்மக்களாகார், சிறப்படையார். கீழ் அல்லார் - இழி குணமில்லாத நல்லோர், கீழ் இருந்தும் - தாழ்வான இடத்திலிருந்தும், கீழ் அல்லர் - தாழ்ந்தவர் ஆகார்.

மேலோர் யார்? யார் மேலோர் ஆகார்? கீழோர் யார்? யார் கீழோர் ஆகார்? குப்பை குவிந்து கோபுரம் ஆகுமா?

## 53. பெருமையும் சிறுமையும்

பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். - குறள் 979

பெருமிதம் இன்மை பெருமை - தற்செருக்கில்லாமையே பெருந்தன்மையாகும், பெருமிதம் ஊர்ந்துவிடல் - செருக்கேறி நடத்தலே, சிறுமை - சின்னத்தனம், அற்பத்தனம் ஆகும்.

பெருமிதம் என்ருல் என்ன? பெருமிதன் எப்படி நடப்பான்? பெருமை எது? சிறுமை எது? ஊர்ந்து விடல் - எது ? அஃது எதைக் காட்டும்?

## 54. சால்பு

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண். - குறள் 983

அன்பு - எல்லாரிடமும் உள்ளன்பு, நாண் - பழிக்கு அஞ்சுதல், தீமையை நாணுதல் பிறர் மனதைப் புண்படுத்த வெட்குதல், ஒப்புரவு - பரோபகாரம், பிறர்க்குதவி, கண்ணோட்டம் - பழகினவரை அறிந்து மதித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையோடு – மெய்யுரையுடன், ஐந்து – இந்த ஐந்து தன்மைகளும், சால்பு
ஊன்றிய தூண் – சான்றாண்மை ஊன்றி நிற்கும் (சான்றாண்மையைத் தாங்கும்)
தூண்கள் போலாகும்.

சால்பு என்றால் என்ன? சாண்றாண்மையைத் தாங்குவன எவை? கண்ணோட்டம் என்றால் என்ன?

## 55. மகிழ்ந்து பழகுக

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்(று) இருள். – குறள் 999

நகல் வல்லர் அல்லார்க்கு – புன்னகை மகிழ்ச்சியுடன் பழகத் தெரியாதவர்களுக்கு, மா இரு ஞாலம் – மிகப் பெரிய இந்த உலகம். பகலும் – ஒளி நிரம்பிய பகற்பொழுதும், இருள்பால் பட்டன்று – இரவுபோல் பயன் படாது போகும்.

பகலுலகம் யாருக்குப் பயன்படும்? பகலும் யாருக்கு இரவு போலாய் விடும்? நகல் வல்லர் யார்? இருள் பாற்பட்டன்று என்றால் என்ன?

## 56. பண்பில்லாதவன் பொருள்

பண்பில்லான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. – குறள் 1000

பண்பு இலான் – நற்குண மில்லாதவன், பெருந்தன்மை இல்லாதவன், பெற்ற பெருஞ் செல்வம் – அடைந்த பெரிய செல்வம், நன்பால் – நல்ல பால், கலந்தீமையால் – ஏனத்தின் களிம்பால், திரிந்து அற்று – கெட்டுப் போனதைப் போலாகும்.

பாலைக் களிம்புப் பாத்திரத்தில் வைத்தால் என்ன ஆகும்? பண்பில்லாத மடையனிடம் பணம் சேர்ந்தால், என்ன ஆகும்?

## 57. உதவாப் பொருள்

நச்சப் படாதவன் செல்வம், நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. – குறள் 1008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சப்படாதவன் செல்வம் – பிறரால் உதவிக்கு விரும்பப் படாதவன் செல்வம், நடு ஊர் – ஊர் நடுவே, நச்சு மரம் பழுத்து அற்று – நஞ்சுள்ள மரம் பழுத்தது போலாகும்.

ஊர் நடுவே எட்டி பழுத்தால் என்ன பயன்? செல்வத்தால் பயனென்ன? பிறர்க்கு உதவாச் செல்வம் எதைப் போன்றது? நச்சுதல் என்றால் என்ன?

### 58. குடும்ப வளமை

ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. – குறள் 1022

ஆள்வினையும் – ஒரு காரியத்தில் ஆழ்ந்த விடாமுயற்சியும், ஆன்ற அறிவும் – நிறைந்த நல்லறிவும், அனுபவம் மிக்க அறிவும், என இரண்டின் – என்னும் இரண்டினால் நீள் வினையால் – உயரும் வினைத்திறத்தால், குடி நீளும் – மனை வாழ்க்கை நீண்டு வளரும்.

ஆள் வினை; நீள் வினை என்றால் என்ன? ஒரு குடித்தனம் எதனால் வளம் பெற்று நீடிக்கும்?

### 59. உழவர் பெருமை

உழுவார் உலகத்தார்க்(கு) ஆணி அஃதாற்று(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து. – குறள் 1032

அஃது ஆற்றாது – உழவுத் தொழில் செய்யாது, எழுவாரை எல்லாம் – வாழ்பவர்களை எல்லாம், பொறுத்து – தாங்கி, உழுவார் – உழுது பயிர் செய்யும் குடியானவர்கள், உலகத்தார்க்கு – உலகில் உள்ளவர்களுக்கு (உலகத்தார் வாழ்விற்கு) ஆணி – கடையாணி போல்வர்.

உழுவார், எழுவார் என்றால் என்ன? ஒரு சக்கரத்திற்குக் கடையாணியால் என்ன பயன்? உலகிற்கு உழவரால் என்ன பயன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60. பிச்சை கேட்காதே

ஆவிற்கு நீரென்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்த தில். – குறள் 1066

ஆவிற்கு நீர் என்று – பசுவிற்குத் தண்ணீர் வேண்டும் என்று, இரப்பினும் – பிறரிடம் கேட்டாலும், யாசித்தாலும், நாவிற்கு–நாவுக்கு, இரவின் – பிச்சை கேட்பதைப் போல, இரத்தலைப் போல, இளிவந்தது இல் – ஏளனமானது வேறில்லை.

இரத்தல் என்றால் என்ன? அதனால் என்ன தீமை? மனிதருக்கு எதனால் இழிவு வரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம் (905) 566-4822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org